


நாமக்கல்லில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2026) தமிழ்நாடு பழங்குடி மக்கள் நல முன்னேற்ற சங்க தலைவர் தங்கராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, பழங்குடியின மக்களின் நல் வாழ்விற்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ் குமார் உள்ளார்.



நாமக்கல்லில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2026) தமிழ்நாடு கோழிப்பண்ணை சங்கத் தலைவர் சிங்கராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் மேம்பாட்டிற்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் உள்ளார்.



நாமக்கல்லில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2026) தமிழ்நாடு சவரத் தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் டி.கே. ராஜா மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் மேம்பாட்டிற்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர். என். ராஜேஷ்குமார் உள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# மகளிர் சமுதாயம் முன்னேற நிறைவேற்றப்படும் திட்டங்கள்!

## இந்திய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்றன!

**சென்னை, ஏப். 18 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சி மகளிர் சமுதாயம் முன்னேற நிறைவேற்றிவரும் திட்டங்கள் இந்திய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்றன!**

நீதிக்கட்சி ஆட்சிக்காலம் முதல், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களும் பெண்கள் சமுதாயம் முன்னேற சிறப்பான பல திட்டங் களை நிறைவேற்றியதால் மகளிர் சமுதாயம் எழுச்சிபெற்றுத் திகழ்கிறது.

**வரலாறு போற்றும் மகளிர் நலத் திட்டங்கள்!**

நீதிக்கட்சி ஆட்சியில்தான் உலகிலேயே முதன் முதல் மகளிர்க்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.க/ ஆட்சிக்காலத்தில் பெண்கள் நலனுக்காக அடுக்கடுக்கான பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

1973ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் துறையில் மகளிர் நியமனம்.

1975ஆம் ஆண்டில் விதவை மகளிர் மறுமணத் திட்டம்.

1989ஆம் ஆண்டில் மகளிர்க்கு மூதாதையர் சொத்தில் சமபங்களிக்கும் சொத்துரிமைச் சட்டம்!

1989ஆம் ஆண்டில் அரசுப் பணிகளில் மகளிர்க்கு 30 சதவீத இடஒதுக்கீடு.

தருமபுரியில் மகளிர் திட்டம் எனும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டம்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்.

ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு ஏழை மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்; பின் பட்ட மேற்படிப்பு வரை நீட்டிப்பு.

1990ஆம் ஆண்டில் 5ஆம் வகுப்பு வரை முழுவதும் பெண்களே ஆசிரியர்களாக நியமனம்.

1996ஆம் ஆண்டில் தொழில் வளாகங்களில் தொழில் மனைகள் ஒதுக்கீட்டில் 10 சதவீதம் மனைகள் மகளிர்க்கு வழங்கும் திட்டம்.

மீனவ மகளிர்க்கு இலவசமாக மோட்டார் பொருத்திய வாகனங்கள் வழங்கும் திட்டம்;

உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு சட்டம்; இன்று இந்த இடஒதுக்கீடு 50 சதவீதமாக நடைமுறை.

1999ஆம் ஆண்டில் மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்.

எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சத்துணவு திட்டத்தில் தற்காலிகமாகப் பணியாற்றி வந்த 2 இலட்சத்து 2 ஆயிரம் மகளிரின் பகுதி நேரப் பணி நிரந்தரப் பணியாக மாற்றம்; ஓய்வூதியத் திட்டம் நடைமுறை;

சத்துணவுத்திட்ட மகளிர் இறக்க நேர்ந்தால் அவர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில நியமனம்!

2008ஆம் ஆண்டில் 50 வயது கடந்தும் திருமணம் ஆகாத ஏழைப் பெண்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டம் என மிகப் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு; திராவிட நாயகர் ஆட்சியில் இன்றும் தொடர்ந்து அத்திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு பெண்கள் சமுதாயத்திற்குப் பயனளித்து வருகின்றன.





கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்

**திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக் கால மகளிர் நலத்திட்டங்கள்**

திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் ஆண், பெண் பாலின வேறுபாட்டைக் களைந்திடவும், பெண்களுக்கேற்ற பாதுகாப்பான சூழ்நிலைகளை ஏற்படுத்திடவும், அவர்களுக்கான சமூகநீதி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்திடும் வகையிலும் தமிழ்நாடு அரசின் சார்பில் “தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை” 2024ஐ உருவாக்கி 21.2.2024 அன்று வெளியிட்டார்கள்.

**மகளிர் விடியல் பயணத் திட்டம்**

2021 இல் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே முதல் கையொப்பம் இட்டு மகளிர் மாதம் ஒன்றுக்கு 888 ரூபாய் சேமிக்க வகை செய்யும் முதலமைச்சர் அவர்களின் விடியல் பயணத் திட்டத்திற்கு பெண்கள் பொருளாதாரச் சுதந்திரத்திற்கு வழி வகுத்தார்கள்.

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகை**

பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரித்திட 1.30 கோடி மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கும் மகளிர் உரிமைத் திட்டம்.

**புதுமைப்பெண் திட்டம்!**

6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவியர், தடையின்றி உயர் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு, மாதம் ரூ.1,000/ வழங்கும் புதுமைப் பெண் திட்டம்.

**பணிபுரியும் மகளிருக்கு “தோழி விடுதிகள்”**

படித்து முடித்து மகளிர் பாதுகாப்புக்காகத் தங்கிப் பணிசெய்ய தமிழ்நாட்டின் முக்கியமான 19 நகரங்களில் தோழி விடுதிகள்.

**ஓய்வு வயது உயர்வு**

சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்க்கான ஓய்வு வயது 58லிருந்து 60 ஆக உயர்வு.

**மகளிர் சுய உதவிக்குழு கடன் ரத்து**

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்கள் ரூ.2,755.99 கோடி ரத்து செய்யப்பட்டு 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர் பயன்.

**மகளிர் சுய உதவிக்குழு கடன் உச்சவரம்பு அதிகரிப்பு**

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்ச வரம்பு ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்வு.

13,003 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 5 சதவீத வட்டியில் ரூ.35.35 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.



அரசு பேருந்துகளில் மகளிர் விடியல் பயணம்

**காவல்துறையில் மகளிர் நலம்**

மகளிர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வண்ணம் கூடுதலாக 29 மகளிர் காவல்நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட்டு மொத்தம் 244 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மகளிர் காவலர்களுக்கு இலகுவான பணிகள் வழங்கிட திராவிட நாயகர் அவர்கள் உத்தரவிட்டுப் பின்பற்றப்படுகிறது.

பெண்களுக்குத் துன்பம் விளை வித்தலைத் தடை செய்கின்ற தமிழ்நாடு திருத்தச் சட்டம் 2025 நிறைவேற்றப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு சிறப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகளுக்குக் கடன்**

மாற்றுத்திறனாளிகளைச் சுயசார்புடையவர்களாக மாற்றவும், அவர்களின் நிதி சுதந்திரத்தை வளர்த்திடவும், 32,448 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.151.66 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**பணிபுரியும் - மகளிர் தொழில் முனைவோர்க்குக் கடன்**

சமூக நீதியை மேம்படுத்த 11,906 பணிபுரியும் பெண்களுக்கு ரூ.331.13 கோடியும், 32,338 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.191.23கோடியும் கடன்கள் வழங்கி மகளிர் தொழில் முதலாளிகளாக உயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தியா முழுவதிலும் தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் பெண்களில் 41 சதவீதத்தினர் தமிழ்நாட்டுப் பெண்மணிகள்; இதில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம். தமிழ்நாட்டு தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிர் நலன்கருதி 17 சிப்காட் தொழில் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**பதிவுக் கட்டணம் ஒரு சதவீதம் குறைப்பு**

1.4.2025 முதல், 10 இலட்சம் ரூபாய் வரையிலான மதிப்புள்ள வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையாச் சொத்துகள், பெண்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டால், அத்தகைய ஆவணங்களுக்கு பதிவுக் கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப் பட்டுள்ளது.

**கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி**

36 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்கவும். தமிழ்நாட்டில் அந்நோயினை அறவே அகற்றிடவும். HPV (Human Papilloma Virus) தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்துப் பெண் குழந்தை களுக்கும் தடுப்பூசி போடும் திட்டம் என பெண்கள் சமுதாயத்தின் நலனில் நிறைவேற்றியுள்ள பல முத்திரைத் திட்டங் களால் திராவிட நாயகர் அவர்கள் மகளிர் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள தனி அக்கறை வெளிப்படுகிறது.

இப்படி மகளிரின் கல்வி, தொழில், ஆரோக்கியம், பொருளாதாரம் என அவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பாடுபட்டுவரும் திராவிட மாடல் அரசின் நல்லாட்சி தொடரும்.